DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

Calender

Miscellaneous **CC. NO.90/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution அ.சா.3

Defence

Court

Name : வைரவசுந்தரம்

Father/ Husband Name : வேலுச்சாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் மூப்பு அறுவை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.08.2018ம் தேதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் 24x7 பணியில் இருந்தபோது அ.சா.2 சரவணன் என்பவர் அவரது மனைவி மூலம் ஆட்டோவில் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை இனம் தெரிந்த மூன்று ஆண்கள் கைகளால் தாக்கியதாகவும், கீழே தள்ளி காலால் மிதித்தாகவும் அதனால மூக்கில் இரத்தம் வந்ததாகவும், கூறினார். சாத்திகோட்டை காலனி அம்மாக்கண்ணு மகால் அருகே மதியம் 02.00 மணியளவில் தன்னை தாக்கினார் என கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் அரை மயக்கத்துடனும், அவர் மதுவில் ஆளுமையில் இருந்ததற்கான மது நாற்றம் அவரது மூச்சுக்காற்றில் கலந்திருந்தது. அவரை உள்நோயாளியான அனுமதித்து பரிசோதனை செய்து சிகிச்சை

அளித்து் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அ.சா.2ன் விபத்து பதிவேடு மற்றும் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை அடங்கிய சான்று அ.த.சா.ஆ2).**

அன்றைய தினம் மதியம் 02.30 மணியளளவில் சாட்சி சுவாமிநாதன் என்பவர் ஆட்டோ மூலம் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை இனம் தெரிந்த மூன்று ஆண்கள் மதியம் 02.00 மணியளவில் சாத்திகோட்டை காலனி அருகே உள்ள அம்மாக்கண்ணு மகால் அருகே வைத்து அவரை கைகளால் தாக்கியதாகவும், கீழே தள்ளியாதகவும் கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவரது இடது கால் முட்டியில் 3செ.மீ. நீளம் 2செ.மீ. அகலமும் கொண்ட சிராய்ப்பு காயம் இருந்தது.

அவரது மேல் உதட்டில் சிறிய வீக்கம் கொண்ட காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனை செய்தபோது அவர் மருத்துவமனையிலிருந்து தன்னிச்சையாக வெளியேறிவிட்டதால் அவரின் காயத்தின் தன்மையை கூற இயலாது என சான்று அளித்துள்ளேன். **(சாட்சி சுவாமிநாதனின் விபத்து பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை வழங்க முடியவில்லை என்று கொடுத்த சான்று அ.த.சா.ஆ.3). போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.2 மற்றும் சாட்சி சுவாமிநாதன் என்னிடம் தன்னை தாக்கிய நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2க்கு வெளிப்படையான காயங்கள் இல்லை என்றால் சரிதான். சாட்சி சுவாமிநாதனுக்கு ஏற்பட்ட காயம் இருசக்கர வாகனத்தில் செல்லும்போலு தவறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மற்ற எதிரிகளின் தரப்பில் 3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதால் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.